[1981 ஜனவரி 28

மாயவரம் நகரில் பாதாளச் சரக்கடை அமைக்கும் திட்டம்

* வினா எண்-73 திரு. என். விஜயபாலன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயவரம் நகரத்தில் பாதாளச்சாக்கடை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது நடைமுறைக்கு வரும்?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கிடமில்லை.

திரு. என். விஜயபாலன் : மாயூரம் நகரத்தில், பழங்காவிரி என்ற வாய்க்கால் தூர்ந்துபோயிருக்கிறது. அதை ஆழப்படுத்தி பாதாள சாக்கடைத் திட்டத்தை அமைக்கலாம். அது பாசனத் திற்குப் பயன்படாது. ஆகவே மீண்டும் மறுபரிசீலனை செய்து அந்தத் திட்டத்தை அரசு நிறைவேற்றுமா?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : அந்த நகராட்சி தன் சொந்தச் செலவிலேயே அந்தத் திட்டத்தை ஏற்க முன்வந்தால் குடிநீர் வடிகால் வாரியம் சாக்கடைத் திட்டத்தை அமைக்க இயலும்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாயூரம் மயிலாடுதுறை நகரத்திலே பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம் தற்போது அரசின் ஆய்வில் இல்லை என்று அமைச்சர் குறிப்பிட்டார். சென்ற தடவை 2,3 தடவைகளுக்கு மேலாக நான் இதே கேள்வியை இதே அமைச்சரிடத்திலே கேட்டபோது அதற்கு மதிப்பீட்டுத்தொகை போடப்பட்டு (குறிப்பேட்டிலே இருக்கிறது) ஆய்வில் உள்ளது என்றும், நிதி ஆதாரம் இடம் தருகிறபோது எடுத்துக்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். எப்போது நிதி ஆதாரம் இடம் தர இருக்கிறது என்பதை அறிய விரும்பலாமா?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : நிதி ஆதாரம் எப் போது இடம் தரும் என்பதை மாயூரம் நகராட்சிதான் சொல்ல வேண்டும்.